அனுப்புதல்

முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை.623407
இராமநாதபுரம் மாவட்டம்

பெறுதல்

உயர்திரு மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள்
மதுரை மண்டலம்
மதுரை.

வழி : உரிய வழியாக..

ஐயா

பொருள்: 13.05.2022 அன்று மூன்றாமாண்டு தமிழ் மாணவ, மாணவிகள் கல்விச் சுற்றுலா சென்று வந்தமைக்கான அறிக்கை சமர்பித்தல் தொடர்பு

பார்வை : ந.க. எண் 4486/அ7/ 2022 நாள் – 11.05.2022

வணக்கம், திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையில் பயிலும் இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு மாணவ,மாணவிகள் நாற்பத்தி ஐந்து பேர் கல்விச் சுற்றுலாவாக 13.05.2022 அன்று தஞ்சாவூர், கல்லணை, முக்கொம்பு ஆகிய இடங்களுக்குத் தங்களின் மேலான அனுமதியுடன் சென்று திரும்பி வந்த நிலையில் அதற்கான சுற்றுலாவின் அறிக்கை பணிந்து இதனுடன் சமர்ப்பிக்கலாகிறது.

தங்களன்புள்ள

இடம் –திருவாடானை

நாள்-   22-5-2022

**<u>திருவாடானை அரசு கலை மற்றும்அறிவியல் கல்லூரியில் பயிலும் இளங்கலை தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர்கள் கல்விச்சுற்றுலா சென்றுவந்ததன் அறிக்கை</u>**

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இக்கல்வியாண்டில் (2021-2022) கல்விச் சுற்றுலாவாக தஞ்சாவூர், கல்லணை, முக்கொம்பு ஆகிய இடங்களுக்கு கடந்த 13-5-2022 அன்று சென்று வந்தனர். மாணவர்கள் 21, மாணவியர்கள் 24 ஆகியோரும் மற்றும் நான்கு ஆசிரியர்களும் பேருந்தில் இவ்விடங்களுக்குச் சென்று வந்தனர். இச்சுற்றுலாவின் வழியாக மாணவ மாணவியர்கள் கல்வியறிவையும் நேரடி காட்சி வழி அறிவினையும் பெற்றனர்.

**<u>தஞ்சாவூர்</u>**

13-5-2022 அன்று காலை 8.30 மணியளவில் மாணவர்கள் முதலாவதாக தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் பார்த்தனர். அக்கோயிலின் பிரம்மாண்டமான அமைப்பையும், சிற்பங்களையும், கல்வெட்டுகளையும் கண்டு அக்கால கட்டடக் கலையின் நுணுக்கத்தையும் பெருமையையும் அறிந்து கொண்டனர்.

**<u>தஞ்சாவூர் அரண்மனை வளாகம்</u>**

இதன்பின் மாணவ மாணவியர்கள் தஞ்சாவூர் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மன்னர்கள் பயன்படுத்திய ஆடை அணிகலன்கள், கைவினைப் பொருட்கள்,கருவிகள் போன்றவற்றை கண்டு மகிழ்ந்தனர்.

**<u>சரஸ்வதி மகால் நூலகம்</u>**

தொடர்ந்து பழைய அரண்மனை வளாகத்தில் உள்ள தமிழகத்தின் தொன்மை வாய்ந்த நூலகங்களில் ஒன்றான தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பழங்கால ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், தகடுகள், பழைய உரையாசிரியர்களின் நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள்,மருத்துவ நூல்கள் என

அனைத்தையும் கண்டனர். அவை சேமிக்கப்படும் முறை பற்றியும் அறிந்து கொண்டனர்.

இது மாணவர்களின் நூலகப் பயன்பாட்டு அறிவை வளர்த்தது.

**அருங்காட்சியகம்**

அடுத்தபடியாக மேற்படி குழுவினர் அருங்காட்சியகம் அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவர்கள் அங்கு பழங்கால பொருள்கள், சிற்பங்கள், வெண்கலச் சிலைகள், கற்சிற்பங்கள், பழங்கால நாணயங்கள், பன்னாட்டு நாணயங்கள் போன்றவைகளைக் கண்டு அவற்றின் வழி தமிழர் பண்பாட்டு நாகரீக வளர்ச்சி நிலையை அறிந்து கொண்டனர்.

**ஒலி ஒளி அரங்கம்**

பழைய அரண்மனையின் உட்பகுதியில் அமைந்துள்ள ஒலி-ஒளி அரங்கில் மாணவர்களுக்கு தஞ்சை மாநகரின் சிறப்புகள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் குறித்து விரிவாக விளக்கும் படக்காட்சி காட்டப்பெற்றது.

**கல்லணை**

மாணவர்கள் அனைவரும் நன்பகல் 1.30 மணியளவில் உணவுண்டு, அதன்பின் கல்லணை அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு கரிகால்சோழன் அமைத்துள்ள கல்லணையின் அமைப்பையும் சிறப்பையும் கண்டனர். பிறகு கரிகால் சோழனின் மணிமண்டபம் அழைத்துச் செல்லப்பட்டனர் அங்கு சோழனின் சிலை அமைப்பையும் ஓவியச் சிறப்பையும் கண்டு மகிழ்ந்ததோடு மன்னர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையை அறிந்து கொண்டனர்.

முக்கொம்பு

சுற்றுலாவின் நிறைவுப் பகுதியாக மாணவர்கள் முக்கொம்பு அழைத்துச் செல்லப்பட்டனர். மூன்று ஆறுகள் சங்கமிக்கும் அந்த இடத்தை மாணவர்கள் பார்த்து பரவசமடைந்தனர். கல்விச் சுற்றுலா சென்ற மாணவர்களுக்குப் பொழுதுபோக்குச் சுற்றுலாவாக இது அமைந்தது.

குறிப்பு:  மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் இச்சுற்றுலாவில் கலந்து கொண்டனர். மேலும் மாணவர்கள் யாரையும் நீர் நிலையின் அருகில் அழைத்துச் செல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவற்றுடன் புகைப்படங்கள் இணைக்கப்பெற்றுள்ளன.

**<u>சுற்றுலா குழுவினர்</u>**



தஞ்சாவூர் பெரிய கோயில் கல்லணை






அரண்மனை வளாகம்







SARASVATI MAHAL LIBRARY
2022.05.13 11:21